செ.வெ.எண்.16 நாள்.11.03.2018.

திருநெல்வேலி மாவட்டம், தென்காசி அரசு மருத்துவமனையில், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கினார்கள்.

------

திருநெல்வேலி மாவட்டத்தில் 2ம் கட்டமாக 0 முதல் 5 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கும் முகாம் இன்று (11.03.2018) நடைபெறுகிறது. அதனையொட்டி, தென்காசி அரசு மருத்துவமனை தாய்சேய் நலப்பிரிவில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கினார்கள்.

திருநெல்வேலி மாவட்டத்தில் 0 முதல் 5 வயது வரையுள்ள 2 இலட்சத்து 64 ஆயிரம் குழந்தைகளுக்கு 2ம் கட்டமாக போலியோ சொட்டு மருந்து இன்று வழங்கப்படுகிறது. மொத்தம் 1800 மையங்களில் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கப்படுகிறது. இப்பணிகளில் 7000 ஆயிரம் பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். சங்கரன்கோவில் சுகாதார மாவட்டத்தில் 1 இலட்சத்து 12 ஆயிரத்து 889 குழந்தைகளுக்கு, 809 மையங்களில் போலியோ சொட்டு மருந்து வழங்கப்படுகிறது. இப்பணிகளில் 2172 பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிகழ்ச்சியில், தென்காசி சட்டமன்ற உறுப்பினர் திரு.செல்வமோகன்தாஸ்பாண்டியன், தென்காசி கோட்டாட்சித் தலைவர் திரு.ராஜேந்திரன், இணை இயக்குநர் (பொது சுகாதாரம்) மரு.இளங்கோ, சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர் மரு.சோமசுந்தரம், மருத்துவமனை கண்காணிப்பாளர் திரு.முத்தையா, டான்பெட் துணைத் தலைவர் திரு.கண்ணன் (எ) ராஜு, ஆவின் தலைவர் திரு.ரமேஷ், நெசவாளர் கூட்டுறவு சங்கத் தலைவர் திரு.ஆறுமுகம், தாய்கோ வங்கி துணைத் தலைவர் திரு.குற்றாலம் சேகர், முக்கிய பிரமுகர்கள் திரு.சண்முகசுந்தரம், திரு.கிருஷ்ண முரளி ராஜா மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.